பள்ளிகளுக்கு முதல்வர் கொண்டுவந்துள்ள காலை உணவுத் திட்டம் உள்பட

தமிழ்நாட்டின் கல்வித்துறைத் திட்டங்களை உலகின் பல நாடுகள் பின்பற்றுகின்றன!

சென்னை தூய இருதய மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி சர்ச் பார்க் விளையாட்டு தின நிகழ்ச்சியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் உரை!

சென்னை, ஜூலை 28-

தமிழ்நாட்டின் கல்வித்துறையில் செயல்படுத்தப்படும் பலத் திட்டங்களை உலகத்தின் பல்வேறு நாடுகள் செயல் படுத்தத் தொடங்கியுள்ளன என சென்னை தூய இருதய மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி, சர்ச் பார்க், விளை யாட்டுத் தின நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டின் கல்வித் துறையில் செயல்படுத்தப்படும் பலத் திட்டங்களை உலகத்தின் பல்வேறு நாடுகள் செயல்படுத்த தொடங்கியுள்ளன என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் நேற்று (27.7. 2024) சென்னை தூய இருதய மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி சர்ச் பார்க் விளையாட்டுத் தினவிழாவில் சிறப்புரையாற்றினார். அவ்வுரை வருமாறு:

நான் பல பள்ளி விழாக்களில் கலந்துகொள்கிற இந்த வாய்ப்பை தொடர்ச்சியாகப் பெற்றிருக்கிறேன். மாநகராட்சி மன்ற உறுப்பினராக இருந்தபோதும், வார்டுக்குழுத் தலைவராக இருந்தபோதும், மேயராக இருந்தபோதும், சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோதும், தற்போது அமைச்சர் பொறுப்பேற்றிருக்கிற இந்த சமயத்திலும்கூட பல்வேறு தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள், கலைக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள் என்று பல்வேறு நிர்வாகங்கள் நடத்துகிற நிகழ்வுகளில் பங்கேற்கிற வாய்ப்புகளைத் தொடர்ச்சியாக நான் பெற்றிருக்கிறேன்.

பெற்றோர்கள் அதிகம் பங்கேற்பது சிறப்பு!

அந்தந்த விழாக்களில் பள்ளி மாணவர்களும், ஆசிரியர்களும் தான் பெருமளவில் பங்கேற்றிருப்பார்கள். ஆனால் இப்போது நடைபெறுகின்ற இப்பள்ளி விழாவில் மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவோ, அவ்வளவையும் விட அதிக அளவில் பெற்றோர்களும் பங்கேற்றிருப்பது என்பதுதான் இந்த விழாவுக்கு மிகப் பெரிய அளவிலான சிறப்பு.

இந்தப் பள்ளியின் தொடக்க விழாப் போட்டிகள், தொன்மை மாறாமல் நாம் விளையாட்டுகளிலும் வீரக்கலைகளிலும், எவ்வாறு சிறந்து விளங்கிக் கொண்டிருக்கிறோம். எதிர்காலத்தில் எவ்வாறு நாம் வீரக்கலைகளிலும், பழந்தமிழர் விளையாட்டுக்களிலும் நாம் எவ்வாறு விளங்கிட வேண்டும் என்பதை நாம் ஊருக்கு உணர்த்திட வேண்டும் என்பதற்காக இந்த அற்புதமான நிகழ்ச்சி இங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதற்காக இந்தப் பள்ளியை, அதன் நிர்வாகத்தை நாம் மனதார பாராட்டவும், வாழ்த்தவும், போற்றவும் கடமைப் பட்டிருக்கிறோம்.

இன்றையக் காலக்கட்டங்களில் இளைய சமுதாயம் இணையதள விளையாட்டுகளில் மூழ்கிக்கிடப்பதை நாம் பார்க்கிறோம். அதனால் மாணவர்களுக்கு மன உளைச்சல், மனஇறுக்கம் போன்ற பல்வேறு வகைகளில் மாணவர்கள், குறிப்பாக இளைய சமுதாயத்தினர் பாதித்து வருகிற நிலையில், பழங்காலத்து வீர விளையாட்டுக்களை வாள் சுழற்றுதல், வில்அம்பு போன்ற பல்வேறு விளையாட்டுக்கள், இந்தப் பள்ளியின் மூலம் நினைவுபடுத்தப்படுதல் என்பது இந்த பள்ளியில் விளையாட்டுக்களை ஊக்கப்படுத்துகிறோம் என்று சொல்லியிருப்பது உண்மையிலேயே மகிழ்ச்சியான ஒன்று.

சர்ச் பார்க் பள்ளி என்றாலே சென்னையின் பிரதான அடையாளங்களில் ஒன்று என்று சொன்னாலும் கூட, தமிழகத்தின் பிரதான அடையாளங்களில் ஒன்று என்றும் சொன்னாலும்கூட அதில் மிகையொன்றுமிருக்காது. அந்த அளவுக்கான மிகச் சிறந்த பள்ளி. அந்தப் பள்ளியில் நடைபெறுகின்ற விழாக்களில் சென்னை மேயராக இருந்தபோதும், பங்கேற்கிற வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. தற்போது இந்த வாய்ப்பு பெஞ்சமின் அவர்கள் வாயிலாகக் கிடைக்கப்பெற்றிருக்கிறது. அதற்கான நான் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பள்ளியில் பழைய மாணவர்கள் இங்கேகூட, இப்போது இந்த மாணவி அசீலா சான்றிதழ் மற்றும் கேடயத்தைப் பெற்று ஒரு சாதனை மாணவியாக இங்கே வீற்றிருக்கிறார். அவர் பள்ளியில் படித்தபோதும் எந்த அளவுக்கு சாதனைப்புரிந்தார். இப்போதும் எந்த அளவுக்கு சாதனையாளராக இருக்கிறார் என்பதை எடுத்துக்காட்டியிருக்கிறீர்கள்.

ஏராளமான ஆளுமைகள் பயின்ற பள்ளி!

அதேபோல் இந்தப் பள்ளியில் படித்தச் சென்றவர்கள் எந்தந்த துறைகளில் சாதனைப் படைத்தார்கள் என்பதை நினைத்துப் பார்த்தாலே இந்தப் பள்ளியின் பழம்பெருமைகள் என்பது பெரிய அளவில் பாராட்டப்பட கூடிய ஒன்றாக இருக்கும்.

பெருமதிப்பிற்குரிய நினைவில் வாழும் ஜெயலலிதா அம்மையார் பெயரால் ஒரு கோப்பை வழங்கப்பட்டிருக்கிறது. அவர் இந்தப் பள்ளியின் பழைய மாணவி. 1963-64ஆம்

ஆண்டில் இந்தப் பள்ளியில் படித்தவர் என்பது நாம் மகிழ்ச்சி அடையக் கூடிய ஒன்று.

அதேபோல் நாடாளுமன்றக் குழுத் தலைவர் திருமதி.கனிமொழி அவர்களும் இங்கேப் படித்தவர்கள் என்பதும், இதேப்போன்று ஏராளமான ஆளுமைகள் இங்கேப் படித்து மிகப்பெரிய அளவில் உயர்ந்து உச்சதில் இருந்திருக்கிறார்கள் என்பதற்கு பல்வேறு சாதனைகளையாளர்களை நாம் சுட்டிக்காட்ட முடியும்.

ஆற்காடு நவாப் இந்தப் பள்ளியில் படித்தவர்கள் என்பதும், இந்தியாவின் சிறந்த பத்திரிக்கையாளர்களில் ஒருவராக விளங்குகிற பெருமதிப்பிற்குரிய இந்து ராம் அவர்களும் இங்கே படித்துச் சிறந்திருக்கிறார்கள். டாஃப் (TAFE) நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக இருந்துகொண்டிருக்கிற மல்லிகா சீனிவாசன் அவர்களும் இப்பள்ளியின் பழைய மாணவி ஆவார்.

அதேபோல் நாடாளுமன்ற உறுப்பினராகவும், சினிமாத்துறையில் புகழ்கொடி நாட்டி சிறந்து விளங்கிய வைஜெயந்தி மாலா அவர்களும் இப்பள்ளியின் பழைய மாணவி என்பதும் நாம்மகிழ்ச்சியடையத்தக்க ஒன்றாகும்.

நடனத்துறையில் சிறந்து விளங்கிய அனிதாரத்னம், ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் முதன்மைச் செயலாளராக இருந்த ரேச்சல் சாட்டர்ஜி, ஐ.ஏ.எஸ்., போர்ச்சுகல் நாட்டின் தூதரக அதிகாரியாகப் பணியாற்றிய லதா ரெட்டி, காங்கிரஸ் பேரியக்கத்தின் முன்னாள் அமைச்சரும், காங்கிரசின் மிகப்பெரிய தலைவராக விளங்கிய ஜெயந்தி நடராஜன் அவர்களும், இந்தப் பள்ளியின் பழைய மாணவிகள் என்பதும் நாம் என்றும் புகழடையத்தக்க ஒன்றாகும்.

அதேப்போல் தமிழ்நாட்டின் முதல் பெண் பைலட் ஏ1 உஷா ரகுநாதன் என்பவரும் இப்பள்ளியின் பழைய மாணவி என்பதெல்லாம் பெருமையடையத்தக்க ஒன்று என்பது மிகப்பெரிய அளவிலான சிறப்பாகும்.

சாரதா மேனன் பயின்ற பள்ளி!

இவையெல்லாவற்றிற்கும் மேலாக அண்மையில் நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்த இந்தியாவின் முதல் பெண் மனநல மருத்துவர் சாரதா மேனன் என்பவரும் இப்பள்ளியின் பழைய மாணவி என்பதும், பெல் சேரிப்புச் சங்கத்தின் அறங்காவலராகப் பொறுப்பேற்றிருந்த சீதாவெங்கட்ரமணி என்பவரும் இந்தப் பள்ளியின் பழைய மாணவி என்பதிலே மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்.

இப்போது செயற்கை முறையில் கருத்தரித்தல் என்பதற்கான விழிப்புணர்வு உலகம் முழுவதும் பரவி வருகிறது என்றாலும் தென்னிந்தியாவின் இனப்பெருக்கத் தொழில்நுட்பத்தின் முன்னோடியாக இருந்த முதல் முனைவராகருந்த கமலா செல்வராஜ் அவர்களும் இப்பள்ளியின் பழைய மாணவியாவார்.

அதேபோல் இந்தியாவில் முதல் வானியற்பியல்துறை நிபுணராக விருந்த டாக்டர் நிர்பமா ராகவன் அவர்களும், இந்தப் பள்ளியின் பழைய மாணவர் என்ற வகையில் இந்தப் பள்ளிக்குப் பெருமைச் சேர்த்தார்கள். இதுபோன்று இப்பள்ளியில் படித்து சிறந்து விளங்கி பலர் அரசியல் ஆளுமையாக இருந்திருக்கிறார்கள். இலக்கியத்துறையில் சாதனைப் புரிந்திருக்கிறார்கள். தொழில்துறையில் நிபுணர்களாக இருந்திருக்கிறார்கள். இப்படிப் பல விற்பன்னர்களை இந்தப்பள்ளி உலகிற்கு தந்திருக்கிறது. அதேப்போல் இன்றைக்கு இந்தப் பள்ளியில் படிக்கிற நீங்கள் எதிர்காலத்தில் மிகப்பெரிய அளவில் வரவேண்டும் என்பதில் இறுவேறு கருத்துகள் இருக்கவே முடியாது.

வணக்கத்திற்குரிய தளபதி அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் பள்ளிகளின் வளர்ச்சிக்கு குறிப்பாக கல்வி வளர்ச்சிக்கு எந்தளவுக்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு, அரசுப் பள்ளிகளாக இருந்தாலும், அரசு உதவிப் பெறும் பள்ளிகளாக இருந்தாலும், பகுதி அளவில் அரசு உதவிப்பெறுகிற பள்ளிகளாக இருந்தாலும் எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பதை நீங்கள் நன்றாகவே அறிவீர்கள்.

முதல்வரின் காலை உணவுத் திட்டம்!

தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றப் பிறகு அரசுப் பள்ளியில் படிக்கிற மாணவர்களுக்கு காலை உணவுத்திட்டம் என்பதை அறிமுகப்படுத்தியதால், இன்றைக்கு அதில் சற்றொப்ப 21 லட்சம் மாணவர்கள் உணவருந்தி சிறப்பாகப் படிக்கிற சூழ்நிலை என்பது தமிழகத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தை இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் செயல்படுத்த முன்வந்திருக்கிறார்கள். ஏன், உலக அளவில் பல்வேறு நாடுகளிலும்கூட தமிழ்நாட்டின் காலைஉணவுத் திட்டத்தை கனடா, இலங்கைப் போன்ற நாடுகளும் பின்பற்ற முனைந்திருக்கி றார்கள்.

அதேபோல் உயர்க்கல்வியிலும், அரசுக் கலைக்கல்லூரிகளில் படிக்கிற மாணவிகள் பயனடைகிற வகையில் மாதந்தோறும் ரூ.1000 வழங்குகிற திட்டமும் செயல்படுத்தப்பட்டு கடந்த இரண்டாண்டுகளில் 4 லட்சத்து 81 ஆயிரத்து 75 மாணவிகள் மாதந்தோறும் ரூ.1000 ரூபாய் உதவித்தொகைப் பெற்று பயனடைந்துள்ளனர்.

இந்தாண்டு மாணவிகளுக்கு மட்டுமே இருக்கின்ற இந்தத் திட்டம் மாணவர்களுக்கும் தமிழ்ப்புதல்வன் என்கிற வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்றைக்கு ஒப்புதல் அளித்து அரசாணைப் பிறப்பிக்கப்பட்டு அதற்கான ரூ.360 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேப்போல் பன்னிரெண்டாம் வகுப்புப் படித்தப்பிறகு என்ன படிக்கலாம், எதைப் படித்து உயரலாம் என்பதற்கு வழிகாட்டுதல்களும், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளித்தும், 'நான் முதல்வன்' எனும் சீரியத் திட்டத்தின் மூலம் 28 லட்சம் மாணவர்கள் கடந்த இரு ஆண்டுகளில் பயனடைந்திருக்கிறார்கள்.

பள்ளிகளை மேம்படுத்தும் தமிழ்நாடு அரசு!

அதைக்காட்டிலும் விளையாட்டுத் துறையிலும் உலக அளவில் சாதனைப்படைப்பதற்கு விளை யாட்டுத் துறையிலும் மிகப்பெரிய அளவில் தமிழ்நாடு வழிக்காட்டிக்கொண்டிருக்கிறது. அதேப்போல் இன்றைக்கு அரசுப் பள்ளிகளில், அரசு உதவிப்பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் போன்றவற்றின் வளர்ச்சிக்கு மிகப்பெரிய அளவில் தமிழ்நாடு அரசு உதவிக்கொண்டிருக்கிறது.

அதேப்போல் இந்தப் பள்ளி கல்விச்சேவையில் கடந்த நூறாண்டுகளில் சிறப்பான வகையில் ஆற்றிவருகிறது. மாணவர்களாகிய நீங்கள் விளையாட்டுக்களில் சிறந்து விளங்கினால் உடற்பயிற்சிக்கான ஊக்கத்தைப் பெறலாம். மாணவர்களுக்கான தனிமனித ஒழுக்கம் மேம்படும். நோய் எதிர்ப்புச் சக்தி உடலில் அதிகரிக்கும் என்பதைமகிழ்ச்சியுடன் எடுத்துக்கூறி இப்பள்ளியில் எல்லா வகையிலும் சிறந்து விளங்குகிற மாணவர்கள், ஆசிரியர்கள், பள்ளி நிர்வாகத்தினர் அனைவருக்கும் அன்பான வாழ்த்துக்களை, பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் உரையாற்றினார்.

மகாராஷ்டிர மாநிலத்தின் முன்னாள் முதல்வர்

உத்தவ்தாக்கரே பிறந்த நாள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூலை 28-

மகாராஷ்டிர மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் உத்தவ் தாக்கரே பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

மகாராஷ்டிர மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் உத்தவ் தாக்கரே அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்!

தங்களது தனிச்சிறப்பான தலைமைத்துவம் 2024 மக்களவைப் பொதுத் தேர்தலில் சிவசேனா (UBT) மற்றும் இந்தியா கூட்டணி மகாராஷ்டிராவில் பல்வேறு சவால்களையும் மீறி வெற்றி பெற்றதில் முக்கியப் பங்காற்றியது.

தாங்கள் தொடர்ந்து வலிமையோடும் வெற்றியோடும் திகழ விழைகிறேன்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

அம்பத்தூர் பால் பண்ணை பராமரிப்புப் பணி!

இடையூறு இல்லாமல் சென்னையில் ஆவின் பால் வழங்க ஏற்பாடு!

ஆவின் நிர்வாகம் தகவல்!

சென்னை, ஜூலை 28-

ஆவின் நிறுவனம் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் சுமார் 15 லட்சம் லிட்டர் பால், சில்லறை விற்பனையாளர்கள், பால் டெப்போக்கள் மற்றும் மொத்த விற்பனையார்கள் மூலமாக பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் 26.07.2024 அன்று முதல் அம்பத்தூர் பால்பண்ணையில் பராமரிப்பு பணி தொடங்கப்பட்டு சுமார் 20 நாட்கள் நடைபெற உள்ளதால் பால் உற்பத்திக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக சென்னையில் உள்ள மற்ற பால் பண்ணைகளிலும் மற்றும் பாடலூர் பால் பண்ணையில் இருந்தும் சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் லிட்டர் பால் சென்னைக்கு கொண்டுவரப்பட்டு மொத்த விற்பனையாளர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்களுக்கு விநியோகிக்கப்படும்.

எனவே பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் இல்லாமல் பால் விநியோகிக்க அனைத்து வகையான முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு ஆவின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

நீர்வரத்து தொடர்ந்து அதிகரிப்பு!

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 103 அடியைத் தாண்டியது!

மேட்டூர், ஜூலை 28 -

கர்நாடக, கேரள மாநிலங்களில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து உள்ளதால் கர்நாடக மாநிலத்தில் உள்ள கிருஷ்ணராஜ சாகர் மற்றும் கபினி அணைகள் நிரம்பின. இதையடுத்து கிருஷ்ணராஜ சாகர் அணையில் இருந்து வினாடிக்கு 1 லட்சத்து 981 கன அடியும், கபினி அணை யில் இருந்து வினாடிக்கு 33ஆயிரம் கன அடியும் என மொத்தம் 1 லட்சத்து 33 ஆயிரத்து 983 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டது.

இதனால் தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு நீர் வரத்து வினாடிக்கு ஒரு லட்சம் கனஅடியை தாண்டியது. இதனால் காவிரி ஆற்றில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் ஒகேனக்கல் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்தருவிகளை மூழ்கடித்தவாறு தண்ணீர் சீறிப்பாய்ந்து செல்கிறது. இதனால் ஒகேனக்கல்லில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

மேட்டூர் அணை

இதனிடையே கர்நாடக அணைகளில் திறந்து விடப்பட்ட தண்ணீர் பிலிகுண்டுலுவை கடந்து தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல் வழியாக மேட்டூர் அணையை வந்து அடைகிறது. ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு 1.41 லட்சம் கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் 28,000 கன அடி நீர் மட்டுமே வந்த நிலையில், தற்போது 1.41 லட்சம் கன அடியாக அதிகரித்துள்ளது.

இந்த சூழலில் கர்நாடக அணைகளில் இருந்து அதிகப்படியான தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால் மேட்டூர் அணை நீர்மட்டம் மளமளவென்று உயர்ந்து வருகிறது. இதனால் மேட்டூர் அணை நீர்மட்டம் தனது முழு கொள்ளளவை எட்ட உள்ளது.

இந்நிலையில் தொடர் நீர்வரத்து காரணமாக மேட்டூர் அணையின் நீர் மட்டம் தற்போது 103.1 அடியை தாண்டி உள்ளது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 1,23,184 கன அடியாக அதிகரித்துள்ள நிலையில், வினாடிக்கு 1,000 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. தலைமையில்

தாம்பரத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்; 10 ஆயிரம் கழகத்தினர் கண்டன முழக்கம்!

சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா - இ.கருணாநிதி - வரலட்சுமி மதுசூதனன் பங்கேற்பு!

சென்னை, ஜூலை 28

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழகத்தை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து தாம்பரத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்கள் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கழகத்தினர் திரண்டு நின்று கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன் ஆகியோர் பங்கேற்றனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், 2024 2025 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் மாற்றான் தாய் போக்குடன், தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசைக்கண்டித்து நேற்று காலை 10.00 மணியளவில் தாம்பரம் சண்முகம் சாலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவநாதன், தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தாம்பரம் மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, எம்.எல்.ஏ., அனைவரையும் வரவேற்றார்.

கழக தலைமை தீர்மானக் குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வீ. தமிழ்மணி, ஜி.சி.அன்புச்செழியன், க.அன்புச்செல்வன், ஆதிமாறன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ. மனோகரன், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், கழக சுற்றுச் சூழல் அணி துணைச் செயலாளர் சாய்ஜெயகாந்த் பாரதி, தொ.மு.ச. பேரவைச் செயலாளர் இரா. பொன்னுராம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்.இதயவர்மன், டாக்டர் ஆர்.டி.அரசு,

பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, டி.காமராஜ், எஸ்.இந்திரன், பி.குணாளன், பெருங்களத்தூர் சேகர், த.ஜெயக்குமார், மாடம்பாக்கம் நடராஜன், ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னாட், செம்பாக்கம் சுரேஷ்,

ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.டி.கருணாநிதி, ந. கோபால், பையனூர் எம். சேகர், ஏ.வந்தேமாதரம், மூவரசம்பட்டு ரவி, ஆப்பூர் பி.சந்தானம், எம்.டி.லோகநாதன், நகரச் செயலாளர்கள் ஜெ.சண்முகம், டி.பாபு, எஸ்.நரேந்திரன், எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக்,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கே.இப்ராகிம், ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன், மூவரசம்பட்டு சதீஷ், க.தேவேந்திரன், ஆர்.எஸ்.சங்கர், கே. எத்திராஜ், எம்.ஆர்.சீனிவாசன், மா.கணேஷ்பாபு, இரா. பாஸ்கரன், எம்.செல்வகுமார், மு.ரஞ்சன், ஜிஜேந்திரன் ராமு, சே.அருள்தேவி, தாம்பரம் மாநகர நிர்வாகிகள் இரா.நரேஷ்கண்ணா, பொன்.சதாசிவம், வ.விஜயரங்கன், பேரூர் செயலாளர்கள் மு.தேவ ராஜ், ஆர்.சதீஷ் குமார், ஜி.டி.யுவராஜ்,

ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள் சரஸ்வதி மனோகரன், உதயா கருணாகரன், நகர மன்றத் தலைவர் தேன்மொழி நரேந்திரன், பேரூராட்சி தலைவர் சாந்தி சதிஷ்குமார், மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் காயத்ரி அன்புச்செழியன், ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர்கள் உமா மகேஸ்வரி வந்தேமாதரம், சத்தியா சேகர், பி.பிரசாத், எஸ்.ஏ.பச்சையப்பன், மாலதி போஸ்கோ, நகர மன்ற துணை தலைவர்கள் தே.திருநாவுக்கரசு, ஜி.கே.லோகநாதன், சித்ரா கமலக்கண்ணன், வீ.அருள்மணி, ஆர்.பரசுராமன், இந்திராணி சுப்பிரமணியன்,

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ப.இராமமூர்த்தி, டி.கே. கமலகண்ணன், கே. மணிகண்டன், கோ. ஜானகி ராமன், தி.க.பாஸ்கரன், எஸ்.ஆல்பர்ட், ஜா.செந்தில்தேவராஜ், பா. ஞானபிரகாசம், சசிகலா, த.வினோத்குமார், டி.பி.செந்தில்குமார், பொன். ரமேஷ்கவி, ஜான் தினகரன், ஆர்.கோவிந்தன், வி.ரவிச்சந்திரன், கே.ஆர்.ஆனந்தன், டி.எஸ்.எம்.ஜெயகரன், எஸ். கர்ணன், டி.ஆர்.சாரதி பெரியநாயகம், பெப்சி கண்ணன், ஆர். ஆர். ஜெயராம்மார்த்தாண்டம், ச.பிரபு, ஜெ.இன்சமாம், வீ.கார்த்திக், ச. ராஜேஷ், வே.சிவசுப்பிரமணியன் மற்றும் கழக நிர்வாகிகள் - கழக தோழர்கள் கலந்துக்கொண்டனர்.

முடிவில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எல்.பிரபு, மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ. சத்தியபிரபு ஆகியோர் நன்றி கூறினார்கள்.

தாம்பரத்தில் நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்டம் முழுவதிலும் இருந்து 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கழகத்தினர் திரண்டு வந்து தமது கரங்களில் கழக கொடி கண்டன பதாகைகளை ஏந்தி நின்று கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள்.

தாம்பரத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் திரண்டு வந்ததன் காரணமாக தாம்பரம் மாநகரமே திக்கு முக்காடியது. தாம்பரம் மாநகரில் காணும் இடமெங்கும் கழகத் தொண்டர்கள் கழக கொடி ஏந்தி நின்றது கண் கொள்ளா காட்சியாக இருந்தது.

ஆஸ்திரேலியாவின் - டாஸ்மானியா ஆராய்ச்சி நிறுவனத்தில் பல்துறை வல்லுநர்களுடன் சந்திப்பு!

மண்வள ஆராய்ச்சிகள் தொடர்பான உயர் தொழில்நுட்பம்!

அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் - மண்வளத்துறை சார்ந்த பேராசிரியர்கள் - ஆராய்ச்சியாளர்களுடன் கலந்துரையாடல்!

சிட்னி, ஜூலை 28-

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அவர்களின் ஆஸ்திரேலியா சுற்றுப்பயணம் மற்றும் கலந்துரையாடல் தொடர்பான செய்திக் குறிப்பு வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப வேளாண்மை-உழவர் நலத் துறையின் சார்பாக மேற்கொள்ள வேண்டிய மேம்பாட்டுப்பணிகள் தொடர்பான ஆராய்ச்சிகள், தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் தொழில் நுட்பங்களை பயன்படுத்துவதில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது போன்ற பணிகளுக்காக வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் தலைமையிலான குழு ஆஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு அரசுமுறை பயணமாக சென்றுள்ளனர். இக்குழுவில் வேளாண்மை உற்பத்தி ஆணையர்/அரசு முதன்மை செயலர், வேளாண்மை உழவர் நலத் துறை மற்றும் உயர் அதிகாரிகள் உடன் சென்றுள்ளனர்.

இப்பயணத்தின் இரண்டாம் கட்டமாக நேற்று (27.07.2024) ஹோபர்ட் நகரத்தில் உள்ள டாஸ்மானியா வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பல்துறை வல்லுநர்களுடன் கலந்துரையாடல் மற்றும் தொழில்நுட்பங்கள் தொடர்பான கருத்து பரிமாற்றங்கள் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

இந்த கலந்துரையாடலின் போது தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட "மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்" என்ற திட்டத்தின் தொடர்ச்சியாக தமிழக விவசாய நிலங்களின் மண் வளத்தை பெருக்கி விவசாயிகள் தரமான உணவு உற்பத்தியை செய்திட தேவையான மண் வள ஆராய்ச்சிகள் தொடர்பான உயர் தொழில்நுட்பங்கள் குறித்து மண்வளத் துறை சார்ந்த பேராசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றது.

மேலும், அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்புகளை தடுப்பதற்கான வழிமுறைகள் பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் உலக வெப்பமயமாதல், பருவமற்ற காலங்களில் மழை பொழிவு, அதி கனமழை பொழிதல், பயிர்களில் அதிக பூச்சித் தாக்குதல், வறட்சி, வெள்ளம் போன்றவற்றிலிருந்து விவசாயிகளைக் காப்பது தொடர்பான முன்னெச்சரிக்கை தொழில்நுட்பங்கள் குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது.

மின்னனு வேளாண்மை, உணவு பதப்படுத்துதல் ஆகியவற்றில் டாஸ்மானியா வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் பின்பற்றப்படும் உயர் தொழில் நுட்பங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டன. மேலும், உயர் தொழில்நுட்பங்களை கொண்டு சத்தான பழ வகைகள் மற்றும் காய்கறிகளை விளை விப்பது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது.

*இக்கலந்தாய்வில் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர், எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரச